# 18 ஆண்டுகளுக்கு பிறகு கிடைத்த அங்கீகாரம்



முனைவர்
டி.கே. ஜயராமன்

கட்டுரையாளர்
மணிலாவில் உள்ள ஆசியன் வளர்ச்சி வங்கியின் முன்னாள் மூத்த பொருளாதார ஆலோசகர்.
தொடர்பு :
tkjayaraman@yahoo.com

உலகின் நான்கு முன்னணி மதிப்பீடு நிறுவனங்களில் ஒன்றான ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் குளோபல் (எஸ் அண்ட் பி ) நிறுவனம், நன்கு வடிவமைக்கப்பட்ட கொள்கைகள், மேம்பட்ட செயல்திறன், பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதித் துறையின் வலிமை ஆகியவற்றின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் 30 முன்னேறிய மற்றும் வளர்ந்து வரும் நாடுகளை மதிப்பிடுகிறது.

இதில் நீண்டகாலம், குறுகிய காலம் என இரண்டு வகையான மதிப்பீட்டு தரவரிசைகள் உள்ளன. நீண்டகால தரமதிப்பீடு, 'ஏஏஏ' (உயர்ந்த தரம்) என்றும், குறுகிய கால மதிப்பீடுகள், 'ஏ1+'ல் இருந்து 'டி' வரை 30 புதிய தரவரிசைகள் கொண்ட 2025ம் ஆண்டுக்கான அறிக்கையை எஸ் அண்டி பி, சமீபத்தில் வெளியிட்டது.

அதில் இந்தியாவின் நீண்டகால கடன் மதிப்பீட்டை, 'பிபி' யில் இருந்து 'பிபிபி' ஆக உயர்த்தியுள்ளது. (வெளியீட்டாளர் தனது நிதிக் கடமைகளை நிறைவேற்ற போதுமான திறனைக் கொண்டுள்ளார் என்பதை 'பிபி', 'பிபிபி', மற்றும் 'பிபிபி+' என்று தரவரிசைப்படுத்தப்படும். 'பிபி' என்பதைவிட, 'பிபிபி' என்பது வலிமையான நிலையாகும்) இது 18 ஆண்டுகளுக்கு பிறகு கிடைத்திருக்கும் பாராட்டு என்றே சொல்லவேண்டும்.

2007 ஜனவரியில் இந்தியாவின் தர மதிப்பீடானது 'பிபி' என்பதில் இருந்து 'பிபிபி' ஆக உயர்த்தப்பட்டது. அதன்பிறகு அதுபோன்ற ஒரு தரமதிப்பீட்டு உயர்வு இப்போதுதான் கிடைத்திருக்கிறது.

18 ஆண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு, அதிலும் ஆகஸ்ட் 15ம் தேதி இந்த அறிவிப்பு வெளியானது, இந்தியாவின் சாதனையை பாராட்ட இதைவிட பொருத்தமான வேறு நாள் இருக்க முடியாது.

இந்த மேம்படுத்தப்பட்ட தர மதிப்பீடு இந்தியாவுக்கு கிடைத்ததற்கு, அதனுடைய துடிப்பான வளர்ச்சி, நிதி ஒருங்கிணைப்புக்கான அரசின் ஸ்திரமான அர்ப்பணிப்பு, பொதுச் செலவினங்களின் மேம்பட்ட தரம், குறிப்பாக மூலதனம், மற்றும் வலுவான நிதி மற்றும் அன்னிய செலாவணி இருப்பு, நம்பகமான பணவீக்க மேலாண்மை ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன என்று எஸ் அண்ட் பி தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

உலகளாவிய சவால்கள் இருந்தபோதிலும் ஒட்டுமொத்த விலை ஸ்திரத்தன்மையை பராமரிப்பதன் மூலம் இந்தியா மீள்தன்மையை வெளிப்படுத்தியுள்ளது என்பதையும் எஸ் அண்ட் பி அங்கீகரித்துள்ளது.

நிதிப் பற்றாக்குறை குறைந்து வருவதும், பொது முதலீடு தொடர்ந்து அதிகரிப்பதும் மேலும் நேர்மறையான மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆதரிக்கக்கூடும் என்றும் இந்தியாவின் பெரிய மற்றும் மீள்தன்மை கொண்ட உள்நாட்டு நுகர்வுத் தளம் காரணமாக, சமீபத்தில் விதிக்கப்பட்ட அமெரிக்க வரிவிதிப்பின் தாக்கம் குறைவாகவே இருக்கும் என்றும் எஸ் அண்ட் பி அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

ஆகஸ்ட் 15 அன்று தேசியக் கொடியை ஏற்றிவைத்து, பிரதமர் நரேந்திரமோடி ஆற்றிய நம்பிக்கை உரைக்கு அடுத்த சில மணிநேரத்தில் எஸ் அண்ட் பி யின் இந்த அறிக்கை, செத்தப் பொருளாதாரம் என்ற அமெரிக்க அதிபரின் விமர்சன வார்த்தைகளால் வருத்தத்தில் வாடியிருந்த ஒவ்வொரு இந்தியனுக்கும் பாலையில் பெய்த மழை போல் புத்தெழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுதந்திர தினத்தன்று, பிரதமர் மோடி, தேசியக் கொடியை ஏற்றி நாட்டு மக்களிடம் பேசியபோது, ' பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும், டிரோன்களையும் தயாரித்து உலகிற்கு அதன் ராணுவ பலத்தைக் காட்டியது என்று' என்று சுட்டிக்காட்டி, சுயசார்பை வலியுறுத்தினார்.

இது மேற்கத்திய நாடுகளைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, அவர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கும். இனிமேல், உற்பத்தி செய்யப்படும் நுகர்வோர் பொருட்களுக்கு முன்னேறிய பொருளாதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதே குறிக்கோளாக இருக்க வேண்டும். அரசியல் சுதந்திரக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ள நவீன உலகில், பொருளாதார சுதந்திரம் என்ற யோசனைக்கு இன்னும் சமரசம் செய்யாத மேற்கத்திய மனதை 'காலனித்துவ நீக்கம்' செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த 'மினி நெருக்கடி' பல வேறு பொருளாதார, நிர்வாக மற்றும் பிற சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தை துரிதப்படுத்தும். இது நிச்சயமாக 1991ம் ஆண்டு நெருக்கடி அல்ல, அப்போது இந்தியா தனது அன்னிய செலாவணிக்காக சர்வதேச நிதியத்திடம் கடனுக்காக கெஞ்ச வேண்டியிருந்தது.

இப்போது டிரம்பின் நடவடிக்கையின் அதிர்ச்சியைத் தாங்கக்கூடிய அளவு, மீள்தன்மை, பன்முகத்தன்மை மற்றும் ஒன்றுபட்ட விருப்பம் உள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவுக்கு ஆண்டுக்கு மிகக் குறைந்த அன்னிய நேரடி முதலீடுகளே கிடைக்கின்றன. 2022– 23ல், நிகர அன்னிய நேரடி முதலீடு 28 பில்லியன் டாலர். அது, 2024– 25ல் 353 மில்லியன் டாலர்களாக குறைந்துவிட்டது. இது அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 96 சதவீதம் குறைவு.

உள்நாட்டு தனியார் முதலீடுகளின் தேக்கம், வளர்ந்து வரும் வேலையின்மை, விவசாயத்தில் குறைந்த உற்பத்தித்திறன், கிராமப்புற மற்றும் நகர்ப்புற துறைகள் இடையிலான வருமானத்தில் உள்ள வேறுபாடு, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் ஆட்டோமேஷன் யுகத்தில் தேவையான திறன்களுக்கும் பட்டதாரிகளுக்கும் பெரிய பொருத்தமின்மை போன்றவை அனைத்தையும் கையாள வேண்டும்.

இடைநிறுத்தப்பட்ட சீர்திருத்தங்களை நாட்டின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். கல்வித் துறையில் மிகப்பெரிய சீர்திருத்தங்கள் தேவை. அதன் உணர்வு தேசிய கல்விக் கொள்கையில் பொதிந்துள்ளது, அது முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும்.